**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | சுப்ரமணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 21.01.2025.

A1 & A2 present.

முதல் விசாரணை;

நான் கோம்பைக்காடு பனமரத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மணல் லாரி வைத்துள்ளேன். மேற்படி லாரிக்கு நான் டிரைவராகவும் இருந்து மணல் வியாபாரம் செய்து வருகிறேன். 2014ம் ஆண்டு தொட்டியத்தில் மணல் ஏற்றிக்கொண்டு வந்து வளையப்பட்டியில் டீ கடையில் டீ சாப்பிட வண்டியை நிறுத்தி விட்டு டீ குடிக்க சென்றேன். அப்போது அந்த கடையில் எனக்கு ஏற்கனவே தெரிந்த டிப்பர் லாரியின் டிரைவர் கணேசன் மற்றும் லாரியின் க்ளீனர்

குமார் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் டீ குடித்துவிட்டு கிளம்பிவிட்டார்கள். வளையப்பட்டியில் இருந்து கிளம்பி நான் சேலம் நோக்கி வந்தேன். சந்தியூர் பிரிவில் 10.45 மணி முதல் 11,00 மணி அளவில் நான் வந்தபோது கணேசன் ஓட்டி வந்த லாரி சென்டர் மீடியனில் இடித்துவிட்டு, ஒரு பஸ்சை இடித்துவிட்டு, ஒரு டு வீலரை இடித்துவிட்டு அப்சைட் ஆகி கிடந்தது. அங்கிருந்தவர்கள் 3 பேர்கள் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாகவும் 3 நபர்களை மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் சொன்னார்கள். ஓட்டுனர் கணேசனை எனக்குத் தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். இது சம்மந்தமாக டிஎஸ்பி அவர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மல்லூர் காவல்நிலையம் நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரி. காவல்நிலையத்திற்கு எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் காவல்நிலையத்திற்கு நான் சென்றதில்லை. கடைக்குதான் செல்வேன். 1வது எதிரி கணேசன் மற்றும் குமார் ஆகியோரின் தகப்பனார் பெயர், மற்றும் விலாசம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி. ஆனால் தருமபுரி வண்டி என்பது தெரியும். நான் வளையப்பட்டியில் டீ சாப்பிட வண்டியை நிறுத்தினேன் என்றும் அப்போது கணேசன் மற்றும் குமார் ஆகியோர் நான் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கணேசனையும் குமாரையும் மல்லூர் பிரிவு ரோட்டில் நான் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் நான்

அவ்வாறு கூறவில்லை. அவர்களை நான் அங்கு பார்க்கவில்லை. நான் மணல் லாரி வைத்திருப்பதால் அடிக்கடி காவல்நிலையத்திற்கு செல்வேன் என்றும் அதனால் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி கணேசனை இன்று நீதிமன்றத்தில்தான் போலிசார் எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல. டீ கடையில் பார்த்தபின்னர் இன்றுதான் நான் கணேசனை நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரி. இன்றுதான் கணேசனை போலிசார் எனக்கு அடையாளம் காட்டி போலிசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.